بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

இதழ் 28

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

17 துல்கஅதா 1441 ஹிஜ்ரி கமரி 09 வஃபா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

09 ஜூலை 2020


## அல்லாஹ்வின் கட்டளை

إِنَّمَا التَّوْبَةُ عَلَى اللّٰهِ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السُّوْٓءَ بِجَهَالَةٍ ثُمَّ يَتُوْبُوْنَ مِنْ قَرِيْبٍ فَأُولٰٓئِكَ يَتُوْبُ اللّٰهُ عَلَيْهِمْ ؕ وَكَانَ اللّٰهُ عَلِيْمًا حَكِيْمًا

அறியாமையினால் தீமையைச் செய்து விட்டு, உடனே(யே) பாவமன்னிப்புக் கோருகிறவர் களின் பாவமன்னிப்பை மட்டும் ஏற்றுக் கொள்வதே அல்லாஹ்வுக்குக் கடமையாகும். இத்தகையவர்களுக்கு அல்லாஹ் தயவு காட்டுகின்றான். அல்லாஹ் மிக்க அறிபவனும், நுண்ணறிவுடையோனுமாவான். (4:18)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**அல்லாஹ்விடம் சீர்திருத்தத்தை வேண்டுவது மேலும் தனது ஆற்றலை செலவு செய்வது ஆகிய இதுவே ஈமானின் வழிமுறையாகும். நபிமொழியில் வந்துள்ளது. எவர் ஒருவர் நம்பிக்கையுடன் தனது கையை உயர்த்துவாரோ அல்லாஹ் அவரது துஆவை நிராகரிப்பதில்லை. ஆக இறைவனிடம் கேளுங்கள். மேலும் நல்லெண்ணத்துடன் கேளுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

### இறைவனை அடைய முயற்சி செய்பவர் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார்

இந்த வியாபாரத்தில் இழப்பு என்ற பெயரோ, அடையாளமோ கிடையாது. மாறாக, லாபம் உறுதியானதாகும். விவசாயி எந்த அளவுக்கு முயற்சி செய்து விவசாயம் செய்கின்றார். ஆனால் அதன் விளைவு நிச்சயமாக திருப்திகரமானதாக இருக்கும் என்று எவராவது கூற முடியுமா?

அல்லாஹ் எப்படிப்பட்ட கருணையாளனாக இருக்கின்றான். மேலும் அவன் எத்தகைய கருவூலமாக இருக்கின்றான். நபிமொழியில் வருகின்றது. ஒருவர் வழிப்பாதையிலிருந்து ஒரு முள்ளை அகற்றினாலும் அதற்குரிய கூலி அவருக்கு வழங்கப்படும்.

மேலும் தண்ணீரை எடுத்தவாறு சிறிதளவு தனது சகோதரனின் குழியில் ஊற்றினாலும் அல்லாஹ் அதற்குரிய கூலியையும் வீணாக்கமாட்டான்.

எனவே நினைவில் கொள்ளுங்கள். அதாவது எந்த வழியில் மனிதன் ஒருபோதும் தோல்வி பெறமாட்டானோ அது இறைவனின் வழியாகும். உலகத்தின் ஒவ்வொரு அடியிலும் தடுமாற்றம் மற்றும் தோல்வியின் படிகள் அமைந்துள்ளன.

எவர்கள் தமது அரசாட்சியை கூட விட்டுவிட்டார்களோ அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் கிடையாதே! இப்ராஹீம் அத்ஹம், முஜத்தித் என்று அழைக்கப்படுகின்ற ஷா அப்துல் அஸீஸ் போன்றோர் அரசாட்சி, உலகத்தின் கண்ணியம் ஆகிவற்றை விட்டு விட்டனர். அதன் காரணம் என்னவென்றால், ஒவ்வொரு அடியிலும் ஒரு தடுமாற்றம் இருக்கின்றது. இறைவன் ஒரு முத்து ஆவான். அவனைப் பற்றிய ஞானம் கிடைத்த பிறகு மனிதன் எந்த அளவுக்கு உலகத்தின் பொருட்களை ஏளனமாகவும், இழிவாகவும் பார்க்கின்றான் என்றால், அதனைப் பார்ப்பதற்கு கூட அவனது இயல்பை நிர்பந்தப்படுத்த வேண்டியதுள்ளது. ஆக இறை ஞானத்தை விரும்புங்கள். மேலும் அதன் பக்கமே காலடி எடுத்து வையுங்கள். வெற்றி இதில்தான் அடங்கியுள்ளது.

### நல்லொழுக்க அற்புதங்கள்

அல்லாஹ்விடம் சீர்திருத்தத்தை வேண்டுவது மேலும் தனது ஆற்றலை செலவு செய்வது ஆகிய இதுவே ஈமானின் வழிமுறையாகும். நபிமொழியில் வந்துள்ளது. எவர் ஒருவர் நம்பிக்கையுடன் தனது கையை உயர்த்துவாரோ அல்லாஹ் அவரது துஆவை நிராகரிப்பதில்லை. ஆக இறைவனிடம் கேளுங்கள். மேலும் நல்லெண்ணத்துடன் கேளுங்கள்.

எனது அறிவுரை என்னவென்றால், நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துவது அற்புதத்தை வெளிப்படுத்துவதாகும்.

எவர் ஒருவர் நான் அற்புதத்தை வெளிப்படுத்தக் கூடியவனாக ஆக விரும்பவில்லை என்று கூறுவாரோ அவனை ஷய்த்தான் ஏமாற்றத்தில் ஆழ்த்துகின்றான் என்பதை நினைவில் கொள்ளட்டும். அற்புதம் என்பதற்கு உஜப் மற்றும் பின்தார் என்று பொருளல்ல. மாறாக, அற்புதம் மூலமாக மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் உண்மை நிலை தெரிய வருகின்றது. மேலும் நேர்வழி கிடைக்கின்றது.

நான் மீண்டும் உங்களிடம் கூறுகின்றேன். அதாவது உஜப் மற்றும் பின்தார் அற்புத நல்லொழுக்கத்தைச் சார்ந்தது கிடையாது. இது ஷய்த்தானின் சூழ்ச்சியாகும். பாருங்கள். பூமியின் மேற்பரப்பில் நமக்கு தென்படுகின்ற கோடிக்கணக்கான முஸ்லிம்கள் வாளின் அழுத்தத்தில், நிர்பந்தப்படுத்தியதன் காரணமாக (முஸ்லிம்களாக) மாறினார்களா? இல்லை. இது முற்றிலும் தவறாகும்.

இது இஸ்லாத்தின் அற்புதத்தின் விளைவாகும். அது அவர்களை ஈர்த்து வந்தது. அற்புதங்களில் பல வகைகள் உள்ளன. அதில் ஒன்று நல்லொழுக்க அற்புதமும் ஆகும். அது எல்லா களத்திலும் வெற்றி பெற்றுள்ளது. எவர்கள் முஸ்லிம்களாக மாறினார்களோ அவர்கள் வெறும் நல்லவர்களின் அற்புதத்தைக் கண்டார்கள். மேலும் அதன் தாக்கம் அவர்கள் மீது ஏற்பட்டது. அவர்கள் இஸ்லாத்தை கண்ணியமிகு பார்வையுடன் பார்த்தார்கள். அவர்கள் வாளை பார்க்கவில்லை. பெரிய பெரிய ஆங்கில எழுத்தாளர்கள் கூட இவ்விஷயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது. அதாவது இஸ்லாத்தின் உண்மைத்துவத்தின் ஆன்மாவே எத்தகைய ஆற்றல்மிக்கதாக இருக்கின்றதென்றால் அது அந்நிய சமுதாயங்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு நிர்பந்தப்படுத்தியது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 125,126 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது சமுதாயத்திடம் இந்த விஷயத்தை கூறுங்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் பிறகு உங்களுக்கு அல்லாஹ்விடம் சாக்குபோக்கு கூறுவதற்கு எந்த வாய்ப்பும் இருக்காது**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக. அவர் தமது வாழ்நாளிலும், தமது மரணத்திற்குப் பிறகும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் நன்மையை நாடியவராக இருந்தார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுஹைபே! உமது இந்த வியாபாரம் முந்தையை அனைத்து வியாபாரங்களை விடவும் பயன்தரக்கூடியதாக உள்ளது. அதாவது முன்பு பொருட்களுக்குப் பகரமாக பணம் கிடைத்து வந்தது. ஆனால் தற்போது பணத்திற்கு எதிரில் நீர் ஈமானை பெற்றுக் கொண்டு விட்டீர்**

**ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மீது மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள். அன்னாரைப் பற்றி மிகவும் உயர்வான எண்ணம் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் உமர் அவர்கள் காயமுற்றபோது அன்னார் இவ்வாறு வஸிய்யத் செய்தார்கள். எனது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் ஷுஹைப் (ரலி) அவர்கள் தொழ வைப்பார்கள். மேலும் ஆலோசனைக்குழு கலீஃபாவை தேர்ந்தெடுக்கின்ற வரை மூன்று நாட்கள் வரை அவரே முஸ்லிம்களுக்கு இமாமத் செய்து வருவார்கள்**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சுஹைப் பின் ஸினான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**உலகத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னரோ அல்லது அன்னாருக்கு பின்னரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்று பெண் உரிமையை பாதுகாத்த நபர் வேறு எவரும் இல்லை**

**உண்மை என்னவென்றால், பெண்ணிற்கு சுதந்திரம் வழங்குவதும், பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்குரிய உண்மையான போதனைகளை வழங்கியுள்ளதும் இஸ்லாம் மட்டுமே ஆகும்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 ஜுன் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **05 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் இன்று மீண்டும் பத்ரி சஹாபாக்களின் நற்குறிப்பை துவங்குவேன். அதில் ஹஸ்ரத் சுஹைப் பின் ஸினான் (ரலி) என்ற பெயர் கொண்ட சஹாபியின் குறிப்பை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் தந்தையார் பெயர் ஸினான் பின் மாலிக் ஆகும். தாயார் பின் சல்மா பின் கயீதா ஆகும். ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மோஸல் என்ற ஊரைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் தந்தை அல்லது சிறிய தந்தையார் கிஸ்ராவின் சார்பாக உபுல்லாஹ் பணியாளராக இருந்தார்கள்.

உபுல்லாஹ் தஜல்லா என்ற ஊரின் எல்லையிலுள்ள ஒரு நகரமாகும். அது பிற்காலத்தில் பஸ்ரா என்று அழைக்கப்பட்டது. ரோமானியர்கள் அந்தப் பகுதியில் தாக்குதல் நடத்தினார்கள். மேலும் அவர்கள் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களை கைதியாக பிடித்தனர். அப்போது அவர் மிகவும் சிறிய வயதுடையவராக இருந்தார்கள். அபுல் காஸிம் மக்ரிபி அவர்களைப் பொறுத்தவரை ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் பெயர் உமைரா ஆகும். ரோமானியர்கள் சுஹைப் என்ற பெயரை அவர்களுக்கு சூட்டினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 169,170 சுஹைப் பின் ஸினான் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 33,34 சுஹைப் பின் ஸினான் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 99 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மிகவும் சிகப்பு நிறத்தை கொண்டவர்களாக இருந்தார்கள். உயரமானவராக இருக்கவில்லை. அதேபோன்று குள்ளமானவராகவும் இருக்கவில்லை. தலையில் முடி அடர்த்தியாக இருந்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 41 சுஹைப் பின் ஸினான் – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ரோமானியர்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் வளர்ந்து வந்தார்கள். அவர்களின் பேச்சில் திக்கல் இருந்தது.

கல்ப் என்பவர் ரோமானியர்களிடமிருந்து அவர்களை விலைக்கு வாங்கினார். வேறொரு நபர் அவர்களை மக்காவிற்கு கொண்டு வந்தார். பின்னர் அப்துல்லாஹ் பின் ஜித்தான் என்பவர் அவரை விலைக்கு வாங்கி விடுதலை செய்து விட்டார். ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜித்தான் அவர்களின் மரணம் வரை அவருடன் மக்காவிலேயே தங்கி இருந்தார்கள். எதுவரை என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையும் நிகழ்ந்தது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் சந்ததிகள் கூறுகின்றனர். அதாவது ஹஸ்ரத் சுஹைப்

(ரலி) அவர்கள் பருவமடைந்த வயதை அடைந்தபோது ரோமானியர்களிடமிருந்து தப்பித்து மக்காவிற்கு வந்து விட்டார்கள். பின்னர் அப்துல்லாஹ் பின் ஜித்தான் என்பவருடன் அவரது மரணம் வரை அன்னார் வசித்து வந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 170 சுஹைப் பின் ஸினான் – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

சுஹைப் என்ற ஓர் அடிமை இருந்தார். அவரை ரோமானியர்கள் பிடித்து வைத்திருந்தனர். இவர் அப்துல்லாஹ் பின் ஜித்தானின் அடிமையாக இருந்தார். ஆனால் பின்நாட்களில் அன்னாரை அவர் விடுதலை செய்து விட்டார். இவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக பல துன்பங்களை சகித்து வந்தார்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 443)

ஹஸ்ரத் முஸ்லிம் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த இடத்தில் இவ்விஷயத்தை குறிப்பிடுகின்றார்கள். திருக்குர்ஆனில் இவ்வாறு உள்ளது. இந்த திருக்குர்ஆனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறருடைய உதவியுடன் அல்லது அடிமைகளின் உதவியுடன் உருவாக்கிக் கொண்டார் என நிராகரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

இதற்குரிய ஒரு பதில் என்னவென்றால், இந்த அடிமைகள் முஸ்லிம் ஆன காரணத்திற்காக துன்பங்களுக்கும், அநீதிகளுக்கும் ஆளானார்கள். அப்படியென்றால் இந்த அடிமைகள் துன்பங்களை தமக்குத்தாமே இழைத்துக் கொள்வதற்காகவா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தார்கள்? அடுத்து அவர்கள் ஒளிவு மறைவாக உதவி செய்யவில்லை. மாறாக, வெளிப்படையாகவே உதவியும் செய்தார்கள். பின்னர் மிகவும் உறுதிப்பாட்டுடன் துன்பங்களையும், அநீதிகளையும் சகித்துக் கொண்டார்கள்.

எனவே நிராகரிப்பாளர்களின் இந்த ஆட்சேபணை மிகவும் முட்டாள்தனமான ஆட்சேபனை என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அந்த நம்பிக்கையாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள். அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீது அவர்களுக்கு ஈமான் இருந்தது. அந்த ஈமான் அவர்களை உறுதிப்பாட்டுடன் வைத்தது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து இஸ்லாத்தை கற்றுக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் வஹீயின் மீது அவர்கள் ஈமான் கொண்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 441–443)

ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் சுஹைப் அவர்களை தாரே அர்கம் என்ற வீட்டின் வாசலில் சந்தித்தேன். அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். நான் சுஹைபிடம் உமது எண்ணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு சுஹைப் அவர்கள் உமது எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் ஆஜராகி அன்னாரின் வேதத்தை கேட்க வேண்டும் என்று நான் ஆசை கொள்கின்றேன் என்று கூறினேன். அதற்கு சுஹைப் அவர்கள், நானும் அதனையே விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பிறகு நாங்கள் இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றோம். அன்னார் எங்களுக்கு இஸ்லாத்தை எடுத்துரைத்தார்கள். அப்போது நாங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டோம். பகல் முழுவதும் நாங்கள் அங்கேயே தங்கியிருந்தோம். எந்த அளவுக்கு என்றால் இரவு வந்ததும் நாங்கள் அங்கிருந்து ஒளிந்து வெளியேறி விட்டோம். ஹஸ்ரத் அம்மார் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) ஆகியோர் 30 நபர்களுக்குப் பிறகு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 171 சுஹைப் பின் ஸினான் – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்: இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் நான்கு நபர்கள் முன்னிலை பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

அன்னார் கூறினார்கள்: அரபிகளில் நான் முதன்மையானவனாக இருக்கின்றேன். ரோமானியர்களில் சுஹைப் அவர்கள் முதன்மையானவர்களாக இருக்கின்றார்கள். பாரசீகர்களில் சல்மான் அவர்கள் முதன்மையானவர்களாக இருக்கின்றார்கள். ஹப்ஷ்களில் பிலால் அவர்கள் முதன்மை பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 39 சுஹைப் பின் ஸினான் – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முதன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதை அறிவித்தவர்களில் முதன்மையானவராக இருப்பவர் சஅத் அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஷரீஅத் இறங்கியது. அபூபக்ர், அம்மார் மற்றும் அவர்களின் தாயார் சுமையா, சுஹைப் மற்றும் பிலால், மிக்தாத் ஆகியோர் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அன்னாரின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் அபூதாலிப் மூலம் அல்லாஹ் பாதுகாப்பை வழங்கி இருந்தான். அபூபக்ர் அவர்களுக்கு அல்லாஹ் அன்னாரின் சமுதாயத்தின் மூலம் பாதுகாப்பை வழங்கி இருந்தான்.

இது தொடர்பாக நான் கடந்த குத்பாவிலும் விளக்கமாக கூறியுள்ளேன். இது அறிவிப்பாளரின் எண்ணமாகும். ஏனென்றால் நிராகரிப்பாளர்களின் அநீதிகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இலக்கானார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் இலக்கானார்கள்.

அறிவிப்பாளர் தொடர்ந்து கூறுகின்றார்: ஏனையவர்களை இணை வைப்பவர்கள் பிடித்துக் கொண்டார்கள். இரும்பால் ஆன

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்களுடைய தானங்கள் ஏற்றுக் கொள்ளப்படாததற்கான காரணம், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் அவர்கள் நிராகரிப்பது, தொழுகையினை மிகுந்த சோம்பலுடன் அவர்கள் நிறைவேற்றுவது, இறைவழியில் வெறுப்புடன் அவர்கள் செலவு செய்வது ஆகிய இவற்றைத்தவிர வேறொன்றுமில்லை. (9:54)

Faizal Hameed Ilahi, Tittacherry

முட்களை அவர்களுக்கு அணிவித்தார்கள். அவர்களை சுடும் வெயிலில் கிடத்தி துன்பங்கள் கொடுத்தனர். ஹஸ்ரத் பிலால் அவர்களைத் தவிர அவர்களில் வேறு எவரையும் தமது கூற்றிற்கு இணங்கச் செய்ய முடியவில்லை.

ஏனென்றால் பிலால் அவர்களைப் பொருத்தவரை அல்லாஹ்வுக்கு முன்னிலையில் தனது உயிரை அவர்கள் துச்சமாக எண்ணினார்கள். மேலும் அவர்கள் தமது சமுதாயத்தையும் பொருட்படுத்தவில்லை. எதிரிகள் அவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். மேலும் சிறுவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். எதிரிகள் பிலால் அவர்களை மக்காவின் வீதிகளில் இழுத்துக் கொண்டு சென்றார்கள். அப்போது பிலால் அவர்கள் அஹது அஹது என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

(சுனன் இப்னு மாஜா... ஹதீஸ் எண் 150)

எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று அவர்கள் அனைவரும் கடுமைகளை சகித்துக் கொண்டனர். ஆனால் அனைவரும் தமது ஈமானில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர். ஆனால் பிலால் அவர்களைப் பற்றிய அறிவிப்பில் உள்ளது என்னவென்றால், அன்னாருக்கு மிக அதிகமாக அநீதிகள் இழைக்கப்பட்டன.

அடுத்து கூறப்படுகின்றது. ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மிக பலவீனமானவர்களாக கருதப்பட்ட நம்பிக்கையாளர்களில் ஒருவராக இருந்தார்கள். மக்காவில் அல்லாஹ்வின் வழியில் அன்னாருக்கு துன்பங்கள் தரப்பட்டன.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 170 சுஹைப் பின் ஸினான் – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரும் அதிகமாக துன்பங்களை எதிர்கொண்டார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்களுக்கு எந்த அளவுக்கு வேதனை தரப்பட்டது என்றால் எதிரிகள் என்ன செய்கின்றார்கள்? என்பதையே அறியாத நிலைக்கு அவர்கள் துன்பங்களில் ஆழ்த்தப்பட்டார்கள். இதே நிலைதான் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் அபூ ஃபாய் அவர்களுக்கும், ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா மற்றும் இதர சஹாபாக்களுக்கும் ஏற்பட்டது. இந்த சஹாபாக்களைப் பற்றியே இந்த வசனம் இறங்கியது.

اِنَّ رَبَّكَ لِلَّذِيْنَ هَاجَرُوْا مِنْۢ بَعْدِ مَا فُتِنُوْا ثُمَّ جٰهَدُوْا
وَصَبَرُوْٓا ۙ اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا لَغَفُوْرٌ رَّحِيْمٌ

அதாவது உமது இறைவன் ஹிஜ்ரத் செய்த அவர்களை சோதனையில் ஆழ்த்தினான். பின்னர் அவர்கள் ஜிஹாது செய்தார்கள். மேலும் பொறுமையை மேற்கொண்டார்கள். எனவே நிச்சயமாக உமது இறைவன் இதன் பிறகு மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான். (16:111)

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 34 சுஹைப் பின் ஸினான் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்யக் கூடியவர்களில் இறுதியான நபர் ஹஸ்ரத் ஹஸ்ரத் சுஹைப் பின் ஸினான் ஆவார்கள்.

ரபீவுல் அவ்வல் மாதத்தில் நடந்த சம்பவம் ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கபா என்ற இடத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது அவர்கள் மதீனாவிற்கு புறப்படவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 172 சுஹைப் பின் ஸினான் – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்காக புறப்பட்டார்கள். அப்போது இணை வைப்பவர்களின் கூட்டம் ஒன்று அவர்களை பின்தொடர்ந்து சென்றது. தனது சவாரியிலிருந்து அன்னார் கீழே இறங்கினார்கள். மேலும் தன்னிடத்திலிருந்த அனைத்தையும் வெளியே எடுத்தார்கள்.

மேலும் கூறினார்கள்: குரைஷிகளே! நீங்கள் நன்கு அறிவீர்கள். நான் உங்களில் அம்பு எய்பவர்களில் சிறந்தவன் ஆவேன். என்னிடத்தில் உள்ள அம்புகளைக் கொண்டு உங்களைக் கொல்லாத வரையிலும் மேலும் என்னிடத்திலுள்ள வாளைக் கொண்டு நான் உங்களைக் கொன்று விடாத வரையிலும் உங்களால் என்னை நெருங்க முடியாது. எனவே நீங்கள் என்ன விரும்புகின்றீர்களோ அதை செய்து கொள்ளுங்கள். நீங்கள் எனது செல்வத்தை விரும்புகின்றீர்கள் என்றால் பிறகு எனது செல்வம் எங்கு உள்ளது என்று நான் கூறி விடுகின்றேன். நீங்கள் எனக்கு வழி விடுங்கள் என்று கூறினார்கள்.

அதனை மக்கள் ஒப்புக் கொண்டனர். எனவே ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களும் அந்த இடத்தை கூறி விட்டார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த வியாபாரம் அபூ யஹ்யா அவர்களுக்கு பயனளிக்கக் கூடியதாகும்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது இந்த வசனம் இறங்கியது.

وَمِنَ النَّاسِ مَنْ يَّشْرِيْ نَفْسَهُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ ؕ
وَاللّٰهُ رَءُوْفٌۢ بِالْعِبَادِ (2:208)

அதாவது அல்லாஹ்வின் திருப்திக்காக தனது உயிரையும் விற்று விடுகின்ற நபர்களும் மக்களில் இருக்கின்றனர். அல்லாஹ் தனது அடியார்களின் மீது மிகவும் பரிவு காட்டக்கூடியவன் ஆவான்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 171,172 சுஹைப் பின் ஸினான் – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஷுஹைப் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தார்கள். அப்போது அன்னார் கபா என்ற இடத்தில் இருந்தார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் திருப்தியடைந்து, அல்லாஹ்வும் அவன் தூதரும் போதுமானவர்கள்; அல்லாஹ் தன்னருளால் மேலும் நமக்கு வழங்குவான்: நாங்கள் அல்லாஹ்வுக்கு பணியக்கூடியவர்களாவோம் என்று அவர்கள் கூறியிருப்பார்களாயின் (இது அவர்களுக்கு மிகவும் சிறந்ததாக இருந்திருக்கும்). (9:59)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

அவர்களும், ஹஸ்ரத் உமர் அவர்களும் இருந்தார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் புத்தம் புதிய பேரீச்சம் பழங்களும் இருந்தன. ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹதம் அதனைக் கொண்டு வந்திருந்தார்கள். ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களுக்கு பயணத்தின்போது கண் நோய் ஏற்பட்டிருந்தது. கண்களில் வேதனை இருந்து வந்தது. அவர்களுக்கு கடுமையான பசியும் இருந்தது. பயணத்தின் காரணமாக களைப்பும் ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் பேரீத்தம் பழங்களை உண்பதற்காக விரைந்தார்கள்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் சுஹைப் அவர்களைப் பாருங்கள். அவருக்கோ கண் நோய் உள்ளது. ஆனால் அவரோ பேரீத்தம் பழங்களை உண்டு கொண்டிருக்கின்றார் என்று ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நகைச்சுவையாக ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களிடம், உங்களுக்கு கண் நோய் உள்ளது. கண்கள் வீங்கி உள்ளன. கண்ணீர் வடிகின்றது. ஆனால் நீங்களோ பேரீத்தம் பழம் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றீர்களே? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் கண்களில் சரியான பகுதியைக் கொண்டு உண்டு கொண்டிருக்கின்றேன்.

அதைக்கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள்.

அடுத்து ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் கேட்டார்கள். ஹிஜ்ரத்தின்போது நான் உங்களை என்னுடன் அழைத்துச் செல்வேன் என்று நீங்கள் என்னிடம் கூறினீர்களே? என்று கேட்டார்கள். ஆனால் நீங்கள் என்னை விட்டு விட்டு வந்து விட்டீர்கள்.

பின்னர் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் என்னை உங்களுடன் அழைத்துச் செல்வதாக வாக்குறுதி அளித்திருந்தீர்கள். ஆனால் நீங்கள் என்னை விட்டு விட்டு வந்து விட்டீர்கள். என்னை குரைஷிகள் பிடித்துக் கொண்டார்கள். என்னை சுற்றி வளைத்தார்கள். நான் எனது உயிரையும், எனது குடும்பத்தினரையும் செல்வத்திற்கு பகரமாக பெற்றுக் கொண்டேன் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது பயனளிக்கக்கூடிய வியாபாரமாகும் என்று கூறினார்கள்.

அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

وَمِنَ النَّاسِ مَنْ يَّشْرِىْ نَفْسَهُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ ؕ
وَاللّٰهُ رَءُوْفٌ بِالْعِبَادِ (2:208)

அதாவது அல்லாஹ்வின் திருப்திக்காக தனது உயிரையும் விற்று விடுகின்ற நபர்களும் மக்களில் இருக்கின்றனர். அல்லாஹ் தனது அடியார்களின் மீது மிகவும் பரிவு காட்டக்கூடியவன் ஆவான்.

ஹஸ்ரத் ஷுஹைப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் ஒரு முத் அளவு அதாவது சுமார் அரை கிலோ கோதுமையை வழிப்பாதை உணவாக எடுத்து வந்தேன். நான் அப்வா என்ற இடத்தில் அதனைக் குலைத்தேன். இந்நிலையில் நான் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் வந்தடைந்தேன்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 172 சுஹைப் பின் ஸினான் – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது நான் இந்த பயணத்தில் இந்த அளவு உணவை மட்டுமே உண்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் ஒரு செல்வந்தராக இருந்தார்கள். அன்னார் வியாபாரம் செய்து வந்தார்கள். மக்காவில் அந்தஸ்து பெற்ற மக்களில் ஒருவராக கருதப்பட்டார்கள். அன்னார் செல்வந்தராக இருந்தபோதிலும், விடுதலை செய்யப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் அப்போது அடிமையாக இல்லாதிருந்தபோதும் குரைஷிகள் அன்னாரை அடித்து அடித்து சுயநினைவை இழக்கச் செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து சென்றார்கள்.

அன்னாருக்குப் பிறகு ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் தானும் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு சென்று விட வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் மக்காவாசிகள் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். நீங்கள் மக்காவில் சம்பாதித்த செல்வத்தை எப்படி மக்காவிலிருந்து வெளியே எடுத்துச் செல்ல முடியும் என்று கேட்டார்கள். நாங்கள் உம்மை ஒருபோதும் மக்காவிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள், நான் எனது அனைத்து செல்வத்தையும் விட்டு விட்டால் நீங்கள் என்னை செல்வதற்கு அனுமதிப்பீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அதனை ஒப்புக் கொண்டார்கள். எனவே அன்னார் தனது அனைத்து செல்வத்தையும் மக்காவாசிகளிடம் ஒப்படைத்து விட்டு வெறும் கையுடன் மதீனா திரும்பி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சுஹைபே! உமது இந்த வியாபாரம் முந்தையை அனைத்து வியாபாரங்களை விடவும் பயன்தரக்கூடியதாக உள்ளது என்று கூறினார்கள். அதாவது முன்பு பொருட்களுக்குப் பகரமாக பணம் கிடைத்து வந்தது. ஆனால் தற்போது பணத்திற்கு எதிரில் நீர் ஈமானை பெற்றுக் கொண்டு விட்டீர் என்று கூறினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 194–195)

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு அன்னாருக்கும் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் சமா அவர்களுக்கும் இடையே சகோதரத்துவ பந்தத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் பத்ர், உஹது, அகழ் போர் உட்பட ஏனைய அனைத்துப் போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சர்களான ஆண்களும், பெண்களும் தங்களுக்கிடையே ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டவர்களாவர். அவர்கள் தீயவற்றைக் கொண்டு ஏவுகின்றனர். நன்மையைத் தடுக்கின்றனர். (இறைவழியில் செலவு செய்வதிலிருந்து) தங்கள் கைகளைத் தடுத்துக் கொள்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வை மறந்து விட்டனர். ஆகவே அல்லாஹ்வும் அவர்களை விட்டுவிட்டான். நிச்சயமாக நயவஞ்சர்கள் கட்டுப்படாதவர்கள் ஆவர். (9:67)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 39 சுஹைப் பின் ஸினான் – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஸ் பின் அம்ர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சல்மான், ஹஸ்ரத் ஷுஹைப் மற்றும் ஹஸ்ரத் பிலால் ஆகியோர் மக்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்களை அபு சுஃப்யான் பின் ஹர்ப் என்பவர் கடந்து சென்றார். அப்போது அல்லாஹ்வின் வாள் தற்போது அல்லாஹ்வின் எதிரிகளின் கழுத்தை இன்னும் வெட்டவில்லை என்று மக்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் நீங்கள் குரைஷிகளின் தலைவரைப் பற்றி ஏன் இவ்வாறு கூறுகின்றீர்கள்? என்று கேட்டார்கள்.

இவ்விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அபூபக்ரே! நீங்கள் அவர்களை கோபமூட்டி இருக்கக்கூடும். நீங்கள் ஒருவேளை அவர்களை கோபமூட்டி இருந்தால் நீங்கள் உங்களை இறைவனை கோபமூட்டி இருக்கின்றீர்கள் என்றே பொருள்.

எனவே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அந்த மக்களிடம் சென்றார்கள். எங்களது சகோதரர்களே! ஒருவேளை நீங்கள் கோபமுற்று இருக்கலாம் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், அபூபக்ரே! அவ்வாறல்ல. அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக என்று கூறினர்.

(முஸ்அத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 885 ஹதீஸ் எண் 885 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது )

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த எந்த போர்களிலெல்லாம் பங்கு பெற்றார்களோ அந்த போர்களில் நானும் பங்கு பெற்றிருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பைஅத் வாங்கியபோதெல்லாம் நானும் பங்கு பெற்றிருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த போருக்கு புறப்பட்டபோதிலும் நானும் அவர்களுடன் சென்றேன். நான் அன்னாருக்கு வலப் பக்கமும் இருப்பேன். இடப் பக்கமும் இருப்பேன். மக்கள் தமக்கு முன்னால் அபாயத்தை உணரும்போது நான் அவர்களுக்கு முன்னால் நிற்பேன். மக்கள் பின் புறமாக அபாயத்தை உணரும்போது அவர்களுக்கு பின்னால் நான் நிற்பேன்.

நான் ஒருபோதும் எனக்கும் எதிரிகளுக்கும் மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருவதற்கு இடமளிக்கவில்லை. எந்த அளவுக்கு என்றால் இதே நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணமடைந்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையும் வரை இதே நிலையை பின்பற்றி வந்தேன்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 35 சுஹைப் பின் ஸினான் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் முதுமைப் பருவத்தில் மக்களை ஒன்றுகூட்டி மிகவும் சுவாரஷ்யத்துடன் தனது போர் திறமைகளை பற்றிய சுவையான சம்பவங்களை கூறி வந்தார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 268 சுஹைப் பின் ஸினான் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் பேச்சில் அரபிகள் அல்லாத பேச்சு வழக்கு இருந்து வந்தது. அதாவது அரபிகளின் தெளிவான பேச்சு அதில் இருந்ததில்லை.

ஸைது பின் அஸ்லம் தனது தந்தையாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் உமர் அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் அன்னார் ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் ஒரு தோட்டத்தில் நுழைந்து விட்டார்கள். அது ஆலியா என்ற இடத்தில் இருந்தது.

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களைக் கண்டபோது, யன்னாஸ் யன்னாஸ் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களோ அவர் அந்நாஸ் என்று கூறுவதாக எண்ணினார்கள். எனவே இவர் என்ன கூறுகின்றார்? மக்களை ஏன் அழைக்கின்றார்? என்று ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அவர் தனது அடிமையை அழைக்கின்றார். அந்த அடிமையின் பெயர் யுஹன்னஸ் ஆகும் என்று நான் கூறினேன். நாவிலுள்ள திக்கலின் காரணமாக அவர் அவ்வாறு கூறிக் கொண்டிருக்கின்றார் என்றும் கூறினேன்.

அப்போது ஹஸ்ரத் உமர் அவர்கள், சுஹைபே! மூன்று விஷயங்களைத் தவிர்த்து நான் உம்மிடம் எந்த குறையையும் காணவில்லை. அவை உம்மிடம் இல்லாமல் இருந்திருந்தால் நான் உம்மை விட வேறு எவருக்கும் மேன்மை வழங்க மாட்டேன் என்று கூறினார்கள். நீர் தம்மைத்தாமே அரபிகளைச் சார்ந்தவராக கூறுகின்றீர். ஆனால் உமது மொழியோ அரபி அல்லாதவரின் மொழியாக உள்ளது. மேலும் நீர் ஒரு நபியின் பெயரான அபூ யஹ்யா என்பதை உமது சுட்டுப் பெயராக குறிப்பிடுகின்றீர். மேலும் நீர் உமது செல்வத்தை வீணாக செலவிடுகின்றீர்.

அதற்கு ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது செல்வத்தை நான் வீணாக செலவிடுகின்றேன் என்பதைப் பொறுத்தவரை நான் கூறுவது என்னவென்றால், எங்கு செல்வத்தை செலவிடுவதற்கான உரிமை உள்ளதோ அங்கேயே நான் செலவிடுகின்றேன். நான் வீண் செலவு செய்வதில்லை. எனது சுட்டுப் பெயரைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் எனக்கு அபூ யஹ்யா என்று சூட்டினார்கள். என்னால் ஒருபோதும் அதனை தவிர்க்க முடியாது. நான் அரபிகளை சார்ந்தவனாக கூறிக் கொள்வதை பொறுத்தவரை எனது பதில் என்னவென்றால், என்னை ரோமானியர்கள் சிறு வயதிலேயே கைதியாக்கிக் கொண்டனர். எனவேதான் எனக்கு அவர்களின் மொழியை கற்க நேரிட்டது. நான் நமர் பின் காஸித் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவன் ஆவேன்.

ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் மீது மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள். அன்னாரைப் பற்றி மிகவும் உயர்வான எண்ணம் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் உமர் அவர்கள் காயமுற்றபோது அன்னார் இவ்வாறு வஸிய்யத் செய்தார்கள். எனது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அல்லாஹ் எங்களுக்கு விதித்திருப்பதுதான் எங்களுக்கு ஏற்படும். அவன் எங்கள் பாதுகாவலனாவான். மேலும் நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடத்திலேயே நம்பிக்கை வைத்தல் வேண்டும். (9:50)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

ஷுஹைப் (ரலி) அவர்கள் தொழ வைப்பார்கள். மேலும் ஆலோசனைக்குழு கலீஃபாவை தேர்ந்தெடுக்கின்ற வரை மூன்று நாட்கள் வரை அவரே முஸ்லிம்களுக்கு இமாமத் செய்து வருவார்கள்.

ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்களின் மரணம் ஷவ்வால் மாதம் ஹிஜ்ரி 38 ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்றும் மற்றொரு அறிவிப்பிற்கேற்ப 39 ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்றும் வந்துள்ளது. மரணத்தின்போது ஹஸ்ரத் ஷுஹைப் (ரலி) அவர்களின் வயது 73 ஆக இருந்தது. சில அறிவிப்புகளின் அடிப்படையில் அப்போது அன்னாருக்கு வயது 70 ஆக இருந்தது. அன்னார் மதீனாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 41 சுஹைப் பின் ஸினான் – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நான் எடுத்துரைக்க இருக்கும் அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ (ரலி) அவர்கள் அன்ஸார் கோத்திரமான கஸ்ரஜ் குடும்பத்தின் பனூ ஹாரிஸை சார்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தை பெயர் ரபீஃ பின் அம்ர் ஆகும். தாயார் பெயர் அஸீலா பின்த் உன்பா ஆகும். ஹஸ்ரத் சஅத் அவர்களுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருவரின் பெயர் அம்ரா பின்த் ஹஸம் ஆகும். இரண்டாவது மனைவியின் பெயர், ஹபீபா பின்த் ஸைது ஆகும். ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ (ரலி) அவர்களுக்கு இரண்டு மகள்கள் இருந்தனர். ஒரு மகளின் பெயர் உம்மே சஅத் ஆகும். ஓரிடத்தில் அவரது பெயர் உம்மே சய்யீது என்றும் எழுதப்பட்டுள்ளது. அவரின் அசல் பெயர் ஜமீலா ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 395, தொகுதி 8 பக்கம் 3030 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அம்தத்துல் காரி தொகுதி 20 பக்கம் 216 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ (ரலி) அவர்கள் அறிவீனமான காலகட்டத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருந்தார்கள். அக்காலத்தில் அத்தகைய மக்கள் மிகக் குறைவானவர்களாகவே இருந்தனர். ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ (ரலி) அவர்கள் பைஅத்தே அக்பா மற்றும் சானிய்யாவில் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 214 சுஹைப் பின் ஸினான் – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மதீனா ஹிஜ்ரத் செய்யப்பட்டபோது அன்னாருக்கும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் மதீனா வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னையும் சஅத் பின் ரபீஃ அவர்களையும் எங்களுக்குள் சகோதரர்களாக ஆக்கினார்கள். அப்போது சஅத் பின் ரபீஃ அவர்கள், நான் அன்ஸார்களில் பெரிய செல்வந்தர் ஆவேன். எனவே நான் எனது செல்வத்தில் பாதியை உங்களுக்கு தந்து விடுகின்றேன். எனது இரண்டு மனைவிகளில் நீங்கள் யாரை விரும்புவீர்களோ அவரை நான் விவகாரத்து கொடுத்து விடுவேன். இத்தா முழுமையடைந்த பிறகு நீங்கள் அவரை திருமணம் முடித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள், ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் எனக்கு அதற்கு எந்த அவசியமும் இல்லை. எனக்கு நீங்கள் வியாபாரம் நடைபெறுகின்ற கடைவீதி எங்கு உள்ளது என்று மட்டும் எனக்கு கூறுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் கைனுகா என்ற கடை வீதியைப் பற்றி கூறினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் அதனை அறிந்து கொண்டு காலைப்பொழுதில் அங்கு சென்று பால்கட்டி மற்றும் நெய்யை வாங்கி வந்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாள் காலைப்பொழுதிலும் அந்த கடை வீதிக்கு சென்று வந்தார்கள். அப்போது சிறிது காலமே கழிந்திருந்தது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் வந்தார்கள். அவர்களிடம் கும்குமப்பூவின் அடையாளம் இருந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதைப் பற்றி கேட்டார்கள்.

அன்னாருக்கு திருமணம் ஆனதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனவே இந்த அடையாளத்தை வைத்து பெருமானார் (ஸல்) அவர்கள் வினவினார்கள். குங்குமப்பூவின் அடையாளம் இடப்பட்டிருந்தால் அதன் பொருள் திருமணமாகி விட்டது என்பதாகும்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடம் நீங்கள் திருமணம் முடித்துக் கொண்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் ஆம் என்று கூறினார்கள். அப்போது யாரை திருமணம் நீங்கள் திருமணம் முடித்தீர்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அன்னார் அன்ஸாருடைய இந்த பெண்ணை என்று கூறினார்கள்.

அதற்கு நீங்கள் எவ்வளவு மஹர் தொகையை கொடுத்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு பதிலாக பேரீத்தம் பழத்தின் விதை அளவு தங்கம் கொடுத்து திருமணம் முடித்தேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், வலிமா விருந்து கொடுங்கள்; அது ஆட்டிறைச்சி விருந்தாக இருந்தாலும் சரியே என்று கூறினார்கள். (சஹீஹுல் புகாரி.... ஹதீஸ் எண் 2048)

அதாவது அவர்களின் தகுதிக்கேற்ப வலிமா கொடுப்பதற்கு அன்னாருக்கு கவனமூட்டப்பட்டது.

ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ (ரலி) அவர்கள் பத்ர், உஹது உட்பட போர்களில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹீதானார்கள். உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅத் பின் ரபீஃ அவர்களைப் பற்றி செய்தி அறிந்து எவர் என்னிடம் வருவார் என்று கேட்டார்கள். அதற்கு நான் என்று ஒருவர் கூறினார். எனவே அந்த நபர் போரில் கொல்லப்பட்டவர்களுடன் சென்று அவரைத் தேடினார். ஹஸ்ரத் சஅத் அவர்கள் அந்த நபரைக் கண்டு, நீர் எப்படி இருக்கின்றீர்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், உங்களது நிலையை அறிந்து செய்தியை சென்று சேர்ப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களிடம் என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். அதற்கு ஹஸ்ரத் சஅத் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள். மேலும் எனக்கு ஈட்டியினால் 12 காயங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், என்னிடம் போரிட்டவர்களை நான் நரகத்திற்கு அனுப்பி வைத்து விட்டேன். அதாவது எவரெல்லாம் என்னிடம் சண்டையிட்டாரோ அவரை நான் கொன்று விட்டேன் என்ற செய்தியையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறி விடுங்கள்.

மேலும் எனது சமுதாயத்திடம் இந்த விஷயத்தை கூறுங்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி உங்களில் ஒருவர் உயிருடன் இருந்தாலும் கூட உங்களுக்கு

அல்லாஹ்விடம் சாக்குபோக்கு கூறுவதற்கு எந்த வாய்ப்பும் இருக்காது.

அறிவிப்பில் வருகிறது. அன்னாரிடம் சென்ற நபரின் பெயர் ஹஸ்ரத் அபீ பின் கஅப் ஆகும். ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஹஸ்ரத் அபீ பின் கஅப் அவர்களிடம் கூறினார்கள். நீங்கள் எனது சமுதாயத்திடம் இவ்வாறு கூறுங்கள். உங்களிடம் சஅத் பின் ரபீஃ கூறுகின்றார். நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் நீங்கள் அக்பாவின் இரவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செய்த உடன்படிக்கையை நினைவில் கொள்ளுங்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களில் ஒருவரின் கண் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதாவது உங்களில் எவராவது எஞ்சியிருக்கும் நிலையில் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடைந்து விட்டால் அல்லாஹ்விடம் கூறுவதற்கு உங்களுக்கு எந்த சாக்குப்போக்கும் இருக்காது.

அப்போது அபீ பின் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சஅத் அவர்களிடமே இருந்தேன். அந்நிலையில் ஹஸ்ரத் சஅத் அவர்களின் மரணமும் நிகழ்ந்து விட்டது. அப்போது அவர்களுக்கு ஏராளமான காயங்கள் ஏற்பட்டிருந்தன. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்தேன். மேலும் அங்கு நடந்த உரையாடலை எடுத்துரைத்தேன். அவரின் நிலை இவ்வாறிருந்தது. இவ்வாறு அவர் ஷஹீதாகி விட்டார் என்றும் கூறினேன்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக. அவர் தமது வாழ்நாளிலும், தமது மரணத்திற்குப் பிறகும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் நன்மையை நாடியவராக இருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் ரபீஃ அவர்கள் மற்றும் காரிஜா பின் ஸைது அவர்களை ஒரே கபரில் அடக்கம் செய்யப்பட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 396 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 157 – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் மைதானத்திற்குள் இறங்கி இருந்தார்கள். ஷுஹதாக்களின் உடல்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது தென்பட்ட காட்சி முஸ்லிம்களை ரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்தது. அதாவது போர் முடிந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் காயமுற்றிருந்தார்கள். ஆனால் போர் மைதானத்திற்குள் வந்தார்கள். ஷுஹதாக்களின் உடல்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களை எப்படி நல்லடக்கம் செய்வது என்பது பற்றியும் கூறிக் கொண்டிருந்தார்கள். மேலும் காயமுற்றவர்களை பராமரிப்பது தொடர்பாகவும் கவனமூட்டினார்கள்.

எவ்வாறிருப்பினும் அப்போது முஸ்லிம்களுக்கு தென்பட்ட காட்சி அந்த காட்சி மிகவும் அபாயகரமானதாக இருந்தது. அதாவது இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்தது. 70 முஸ்லிம்கள் இரத்தமும், மண்ணும் கலக்க மரணித்து மைதானத்தில் வீழ்ந்து கிடந்தார்கள். அரபிகளின் காட்டுமிராண்டித்தனமான முகங்களை சிதைக்கும் வழக்கமும் அங்கு நிகழ்ந்திருந்தது. முஸ்லிம்கள் மட்டும் ஷஹீதாக்கப்படவில்லை. மாறாக அவர்களின் முகங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அவர்களின் உடல் உறுப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. கொல்லப்பட்டவர்களில் ஆறு நபர்கள் முஹாஜிரீன்களாக இருந்தனர். மற்றவர்கள் அனைவரும் அன்ஸார்களைச் சார்ந்தவர்களாக இருந்தனர். குரைஷிகளில் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 23 ஆக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சிறிய தந்தை மற்றும் பால்குடி சகோதரரான ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் அவர்களின் உடலை அடைந்தார்கள். அதைக் கண்டதும் சில நிமிடம் தன்னிலை மறந்து நின்றார்கள். ஏனென்றால், அபூ சுஃப்யானின் மனைவியான கொடூரமான நபரான ஹிந்த் அன்னாரின் உடலை மிகவும் மோசமாக சிதைத்திருந்தார். சிறிது நேரம் வரை அன்னார் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள். அன்னாரின் முகத்தில் துன்பம் மற்றும் சோகத்தின் அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. சிறு கனத்திற்கு அன்னாரின் இயல்பு இந்த எண்ணத்தின் பக்கம் சென்றது.

அதாவது மக்கத்து காட்டுமிராண்டிகளுடன் இதேபோன்ற நடைமுறையை செய்யாதவரை அவர்கள் திருந்த மாட்டார்கள். அவர்கள் படிப்பினை பெற மாட்டார்கள் என்று எண்ணம் கொண்டார்கள். ஆனால் அன்னார் தனது இந்த எண்ணத்திலிருந்து விலகி விட்டார்கள். மேலும் பொறுமை செய்தார்கள்.

இன்னும் சொல்வதென்றால், இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் இறந்த எதிரிகள் முகங்களையும் உடல் உறுப்புகளையும் சிதைக்கின்ற அந்த நடைமுறையை இஸ்லாத்தில் நிரந்தரமாக அன்னார் தடை செய்து விட்டார்கள். எதிரிகள் என்ன செய்தாலும் நீங்கள் அவர்களின் இந்த காட்டுமிராண்டித்தனமான வழிமுறையை ஒருபோதும் பின்பற்றக்கூடாது. அதிலிருந்து விலகி இருக்க வேண்டும். நன்மை மற்றும் கருணைக்குரிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு அறிவுரை செய்தார்கள்.

தனது சகோதரரான ஹம்ஸாவின் மீது ஹஸ்ரத் சுஃப்யா பின்த் அப்துல் முத்தலிப் அவர்கள் மிகவும் அன்பு செலுத்தி வந்தார்கள். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த பின்னடைவு செய்தியை அறிந்து அன்னாரும் மதீனாவை விட்டு வெளியே வந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் மகனான சுபைர் இப்னுல் அவாம் அவர்களிடம் நீங்கள் உங்களது தாயாருக்கு உங்களது மாமாவின் மய்யத்தை காட்ட வேண்டாம் என்று கூறினார்கள். ஆனால் சகோதரியின் பாசம் எவ்வாறு பார்க்காமல் இருக்க விடும். மகன் பார்க்க வேண்டாம் என்று கூறினார். ஏனென்றால் அவரது உடல் சிதைக்கப்பட்டிருந்தது. உடலும், முகமும் சிதைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவரது தாயார் ஹம்ஸாவின் உடலை என்னை பார்க்க விடுங்கள் என்று மீண்டும் மீண்டும் கூறினார்கள். மேலும் நான்

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

பொறுமையை மேற்கொள்வேன். எந்த முறையீடான வார்த்தைகளையும் என் வாயால் நான் கூற மாட்டேன் என்று நான் உறுதி கூறுகின்றேன் என்றெல்லாம் கூறினார்கள்.

எனவே அவர் சென்று தனது சகோதரரின் உடலைக் கண்டார். மேலும் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறினார். இதை ஓதியவாறு நிசப்தமாகி விட்டார். குரைஷிகள் ஏனைய சஹாபாக்களின் உடலுடனும் இதே நடைமுறையையே கையாண்டிருந்தனர். அந்த வகையில் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களின் உடலையும் முற்றிலுமாக சிதைத்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு உடலை விட்டு அடுத்த உடலின் பக்கம் செல்லும்போதெல்லாம் அன்னாரின் முகத்தில் வேதனை மற்றும் துன்பத்தின் அடையாளங்கள் அதிகமாகிக் கொண்டே சென்றன.

ஏறக்குறைய அந்த சந்தர்ப்பத்தில்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யாராவது சென்று அன்ஸார்களின் தலைவரான சஅத் பின் ரபீஃ அவர்களின் நிலையை அறிந்து வாருங்கள். அவர் உயிருடன் இருக்கின்றாரா? அல்லது அவர் ஷஹீதாகி விட்டாரா? என்று எனக்கு கூறுங்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் நான் போரின்போது கண்டேன். அவர் எதிரிகளின் ஈட்டிகளால் முற்றிலுமாக மோசமாக சூழப்பட்டிருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூறியதன் அடிப்படையில் அன்ஸாரி சஹாபியான அபீ பின் கஅப் என்ற சஹாபி சென்றார். போர் மைதானத்தில் இங்கும் அங்கும் தேடி அலைந்தார். ஆனால் அவருக்கு எதுவும் தென்படவில்லை. இறுதியில் உரத்த குரலில் சப்தமிடத் தொடங்கினார். சஅத் அவர்களின் பெயரைக் கூறி அழைத்தார். ஆயினும் அவருக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. நிராசையடைந்து திரும்பி செல்லத் தொடங்கினார். அப்போது அவருக்கு இந்த எண்ணம் தோன்றியது.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரை கூறி அழைத்தால் ஒருவேளை எனக்கு ஏதாவது பதில் கிடைக்கலாம் என்று எண்ணினார். முதலில் அவர் வெறும் பெயரை மட்டும் கூறி அழைத்தார். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களை தேடுவதற்காக என்னை உங்களிடம் அனுப்பி வைத்துள்ளார்கள். சஅத் பின் ரபீ அவர்களே! நீங்கள் எங்கே உள்ளீர்கள்? என்னை அல்லாஹ்வின் தூதர் உங்களிடம் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று மீண்டும் மீண்டும் உரத்த குரலில் கூறினார்கள்.

இந்தக் குரல் சஅத் அவர்களின் பாதி மரணித்த உடலில் ஒரு மின்னலை பாய்ச்சியது. இறந்தவர்களுக்கு மத்தியில் குற்றுயிரும், குலை உயிருமாக அவர் கிடந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்டதும் அவரின் உடல் அசைந்தது. எனினும் மிக தாழ்ந்த குரலில் பதில் அளித்தார். யார்? யார் அது? நான் இங்கே இருக்கின்றேன் என்று பதிலளித்தார். அபீ பின் கஅப் அவர்கள் அந்த சப்தத்தை மிகவும் கவனமாக கேட்டார்கள்.

அப்போது மரணித்தவர்களின் குவியலுக்கு மத்தியில் சஅத் அவர்கள் கிடப்பதைக் கண்டார்கள். அப்போது அன்னார் மரண தறுவாயில் இருந்தார்கள். மரணித்துக் கொண்டிருந்தார்கள். அபீ பின் கஅப் அவர்கள், என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களது நிலைமையை அறிந்து அன்னாருக்கு தகவல் கொடுப்பதற்காக உங்களிடம் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

அப்போது சஅத் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள். மேலும் கூறுங்கள்: இறைவனின் தூதர்களுக்கு அவர்களின் சீடர்களின் தியாகங்கள் மற்றும் கலப்பற்ற தன்மையின் காரணமாக நற்கூலி கிடைப்பதுண்டு. இறைவன் மற்ற அனைத்து நபிமார்களை விடவும் அந்த நற்கூலியை உங்களுக்கு அதிகமாக வழங்குவானாக. மேலும் உங்களது கண்களை குளிர்ச்சியூட்டுவானாக. எனது முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது சலாத்தை எட்ட வையுங்கள்.

எனது சமுதாயத்திடம் கூறுங்கள். நீங்கள் உயிருடன் இருக்கும் நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டு விட்டால் அல்லாஹ்வின் முன்னிலையில் உங்களுக்கு எந்த சாக்குப்போக்கும் இருக்காது. இவ்வாறு கூறியவாறு சஅத் அவர்கள் மரணித்து விட்டார்கள்.

**(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 500,501)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது சொற்களில் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள்:

உஹது போர் சம்பவம் ஒன்று உள்ளது. போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபீ பின் கஅப் அவர்களிடம் நீங்கள் சென்று காயமுற்றவர்களை அறிந்து வாருங்கள் என்று கூறினார்கள். அவர் ஒவ்வொருவராக கண்ட பிறகு இறுதியில் ஹஸ்ரத் சஅத் பின் ரபீ அவர்களை சென்றடைந்தார்கள். அன்னார் மிகக் கடுமையாக காயமுற்றிருந்தார்கள். இறுதி மூச்சை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடம், நீங்கள் உங்களது உறவினர்களுக்கும், அன்பர்களுக்கும் ஏதாவது தூதுச் செய்தியை வழங்க விரும்பினால் என்னிடம் கூறுங்கள் என்று கேட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் சஅத் அவர்கள் சிரித்தவாறு கூறினார்கள்: ஒரு முஸ்லிம் இங்கு வர வேண்டும். நான் அவரிடம் தூதுச் செய்தியை கூற வேண்டும் என்பதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் எனது கரத்தில் உங்களது கரத்தை வைத்து எனது தூதுச் செய்தியை நிச்சயமாக எட்ட வைப்பீர்கள் என என்னிடம் வாக்குறுதி வழங்குங்கள் என்று கூறினார்கள். அதன் பிறகு அன்னார் இந்த தூதுச் செய்தியை வழங்கினார்கள்.

எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள். எனது சமுதாயம் மற்றும் எனது உறவினர்களிடம் கூறுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் உள்ள இறைவனின் மிகச் சிறந்த அமானிதம் ஆவார்கள். நாம் நமது உயிரால் அந்த அமானிதத்தை பாதுகாத்துக் கொண்டிருந்தோம். இப்போது நாம் செல்கின்றோம். இந்த உலகத்தை விட்டு விடை பெறுகின்றோம். மேலும் அந்த அமானிதத்தின் பாதுகாப்பு பணியை உங்களிடம் ஒப்படைக்கின்றோம். அதனை பாதுகாப்பதில் நீங்கள் ஒருபோதும் பலவீனத்தை காட்டிவிடக்கூடாது என்று கூறினார்கள்.

பாருங்கள். இதுபோன்ற நேரத்தில் பொதுவாக மனிதனுக்கு

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்ப்பவனுக்கு நரக நெருப்பு (விதிக்கப்பட்டு) உள்ளது. அவன் அதில் நெடுங்காலம் வாழ்ந்து வருவான் என்பது அவர்களுக்குத் தெரியாதா? இது மாபெரும் இழிவாகும். (9:63)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

என்ன எண்ணம் தோன்றும். நானோ மரணித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்குப் பிறகு எனது மனைவியின் நிலை என்னவாகும்? எனது பிள்ளைகளை யார் கருத்தில் கொள்வார்? என்றே மனிதன் எண்ணுவான். ஆனால் இந்த சஹாபி வேறு எந்த செய்தியும் வழங்கவில்லை. அவர் கூறியது ஒன்று மட்டும்தான். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்தவாறு இந்த உலகத்தை விட்டு விடை பெறுகின்றோம். நீங்கள் இதே வழியில் எம்மை பின்தொடர வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாக்கின்ற பணிதான் மாபெரும் பணியாகும் என்று அவர் கூறுகின்றார்.

அந்த மக்களுக்கு மத்தியில் இருந்த இந்த ஈமானிய ஆற்றல்தான் உலகத்தை துச்சமாக எண்ணச் செய்தது. மேலும் கைஸர் மற்றும் கிஸ்ராவின் பேரரசுகளை ஆட்டம் காணச் செய்தது. ரோமானியப் பேரரசர் இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்று ஆச்சரியம் கொண்டார். மேலும் கிஸ்ரா தனது போர் தளபதிக்கு எழுதினார்.

அதாவது உங்களால் இந்த அரபிகளை தோற்கடிக்க முடியாதென்றால் நீங்கள் திரும்பி வந்து விடுங்கள். மேலும் உங்களது வீடுகளில் கைகளில் வளையல்களை மாட்டிக் கொண்டு அமர்ந்து விடுங்கள். இவர்கள் மிகவும் அற்பமான மக்கள். அவர்கள் சாதாரணமான உணவையே உண்ணுகின்றார்கள். அவர்களை உங்களால் தோற்கடிக்க முடியாதா? என்று தனது தளபதியிடம் அவர் கூறினார்.

அதற்கு அவர் கூறியது என்னவென்றால், இவர்கள் மனிதர்களாகவே எங்களுக்கு தென்படவில்லை. இவர்கள் ஏதோ ஆபத்தாகவே இருக்கின்றார்கள். வாள்களையும், ஈட்டிகளையும் தாண்டிக் குதித்து அவர்கள் எங்களிடம் வருகின்றார்கள். அவர்களிடம் எத்தகைய உணர்வும், உத்வேகமும் உள்ளது என்றால் அவர்களை எங்களால் ஒருபோதும் தோற்கடிக்க முடியாது என்று பதிலளித்தார்.

ஒரு முறை ஹஸ்ரத் சஅத் பின் ரபீ அவர்களின் மகள் உம்மே சஅத் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடத்தில் வந்தார்கள். அன்னார் அவருக்காக தனது ஓர் ஆடையை விரிப்பாக விரித்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் வந்தபோது இது யார்? என கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களோ, என்னையும் உங்களையும் விட சிறந்தவராக இருந்த நபரின் மகள் இவர் ஆவார் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! அது யார்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களோ, அந்த நபரின் மரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலேயே நிகழ்ந்தது. அவர் சுவர்க்கத்தை தனது இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார். ஆனால் நானும் நீங்களும் எஞ்சியிருக்கின்றோம் என்று கூறினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 315 சஅத் பின் ரபீஃ – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் அவர்களின் மனைவி தனது இரண்டு மகள்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே இவர்கள் இருவரும் சஅத் பின் ரபீஃ அவர்களின் மகள்களாவர். சஅத் அவர்கள் உஹது போரில் ஷஹீதாகி விட்டார். இவர்களின் சிறிய தந்தையார் இவர்களின் இருவரின் செல்வத்தை எடுத்துக் கொண்டார். அதாவது ஹஸ்ரத் சஅத் அவர்களின் செல்வங்களை எடுத்துக் கொண்டார். இவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. இவர்களுக்காக எந்த செல்வத்தையும் விட்டுச் செல்லவில்லை. எனவே இவர்களின் திருமணத்தையும் நடத்த முடிவில்லை என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் இது தொடர்பாக தீர்ப்பு வழங்குவான் என்று கூறினார்கள்.

அப்போது சொத்துரிமை உள்ளடக்கிய வசனங்கள் இறங்கின. அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் இரண்டு சிறிய தந்தையாரையும் அழைத்தார்கள். மேலும் சஅதின் மகள்களுக்கு சஅதின் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கை கொடுத்து விடுங்கள். அவர்கள் இருவரின் தாயாருக்கு எட்டில் ஒரு பங்கை கொடுத்து விடுங்கள். பிறகு எஞ்சியிருப்பது உமக்குரியதாகும் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் ஃபராயிஸ்.... ஹதீஸ் எண் 2092)

இந்த சம்பவத்தை குறிப்பிட்டவாறு சற்று விளக்கமாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் சஅத் அவர்கள் செல்வந்தர் ஆவார். நல்ல உணவுகளை உண்ணக்கூடியவராக இருந்தார். தனது கோத்திரத்தில் தனி அந்தஸ்தைக் கொண்டிருந்தார். அவருக்கு எந்த ஆண் சந்ததியும் இல்லாமல் இருந்தது. இரண்டு மகள்களும் ஒரு மனைவியும் இருந்தனர். அதுவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சொத்துரிமை தொடர்பாக எந்த புதிய கட்டளையும் அருளப்படாமல் இருந்தது. சஹாபாக்களிடம் பழைய அரபிகளின் நடைமுறையே வழக்கமாக இருந்தது. அதற்கேற்ப சொத்து பங்கிடப்பட்டு வந்தன. மரணித்தவருக்கு ஆண் சந்ததி இல்லையென்றால் அவரின் சொத்துக்களை மரணித்தவரின் நெருங்கிய உறவினர்கள் எடுத்துக் கொள்வார்கள். விதவைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதுவும் கிடைக்காது. அவர்கள் வெறும் கையுடன் இருப்பார்கள்.

எனவே ஹஸ்ரத் சஅத் பின் ரபீ அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு அவர்களது சகோதரர் அவரது அனைத்து சொத்துக்களையும் எடுத்துக் கொண்டார். அன்னாரின் விதவை மனைவியும் அவரது பெண் பிள்ளைகளும் முற்றிலும் ஆதரவற்றவர்களாக ஆகி விட்டனர். இந்த வேதனையினால் நிம்மதியிழந்து சஅதின் மனைவி தனது இரு மகள்களையும் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறி தனது வேதனையை எடுத்துரைத்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய இயல்பிற்கு அந்த வேதனை நிறைந்த சம்பவத்தைக்கேட்டு சங்கடம் ஏற்பட்டது. ஆனால் அவ்விவகாரத்தில் இறைவன் புறமிருந்து அதுவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்தவொரு கட்டளையும்

## திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் நரக நெருப்பை வாக்களித்துள்ளான். அவர்கள் அதில் நெடுங்காலம் வாழ்ந்து கொண்டேயிருப்பார். அவர்களுக்கு அதுவே போதுமானதாகும். மேலும் அல்லாஹ் அவர்களைச் சபித்துள்ளான். மேலும் அவர்களுக்கு நிலையான தண்டனை (விதிக்கப்பட்டு) உள்ளது. (9:68)

A.Basheer Ahmad, Melapalayam

இறங்கியிருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் காத்திருங்கள். இறைவன் புறமிருந்து என்ன கட்டளை வருமோ அதற்கேற்ப தீர்ப்பு வழங்கப்படும் என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதன் பக்கம் அதிக கவனம் செலுத்தினார்கள். அதிக காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சொத்துரிமை தொடர்பான விவகாரத்தில் சில வசனங்கள் இறங்கின. அவை திருக்குர்ஆனின் அந்நிஸா எனும் அதிகாரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅத் அவர்களின் சகோதரரை அழைத்து அவரிடம் கூறினார்கள். சஅத் அவர்கள் விட்டுச்சென்ற சொத்தில் மூன்றில் ஒன்றை அவரின் மகளுக்கும், எட்டில் ஒன்றை உங்களது அண்ணிக்கும் கொடுத்து விட்டு எஞ்சியவற்றை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அப்போதிருந்து சொத்து பங்கீடு தொடர்பான புதிக கட்டளைகள் நிலைநாட்டப்பட்டன. அதன் அடிப்படையில் மனைவி பிள்ளைகளைக் கொண்ட தனது கணவனின் சொத்தில் எட்டில் ஒரு பங்கை பெறுகின்றார். சந்ததியற்ற கணவனின் சொத்தில் நான்கில் ஒன்றை பங்காக பெறுகின்றார். பெண் பிள்ளைகள் தனது தந்தையின் சொத்தில் தனது சகோதரர்களின் பங்கில் பாதி பங்கு அளவு பெறுகின்றனர்.

சகோதரர் இல்லை என்றால் அனைத்து சொத்துக்களும் சூழ்நிலைக்கேற்ப மூன்றில் ஒன்றோ அல்லது பாதியோ அல்லது நான்கில் மூன்றோ அல்லது இரண்டில் ஒன்றோ பெறுகின்றார். தாய் சந்ததிகளைக் கொண்ட தனது மகனின் சொத்தில் ஆறில் ஒன்றை பங்காக பெறுகின்றார். சந்ததியற்ற மகனின் சொத்தில் மூன்றில் ஒன்றை பங்காக பெறுகின்றார். இதேபோன்று ஏனைய வாரிசுகளின் பங்கும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பெண்களிடமிருந்து பறிக்கப்பட்டிருந்த அவர்களுக்குரிய உரிமை இதன் மூலம் அவர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் சாஹிப் அவர்கள் குறிப்பு ஒன்றை எழுதி நான் இதனைக் குறிப்பிடுவது அவசியமாக கருதுகின்றேன் என்றும் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கல்வி சிறப்புகளில் ஒரு பெரும் சிறப்பு என்னவென்றால், அன்னார் பெண் குலத்தின் அனைத்து ஆகுமான மற்றும் அவசியமான உரிமைகளை முழுமையாக பாதுகாத்துள்ளார்கள். இன்னும் சொல்வதென்றால், உலகத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னரோ அல்லது அன்னாருக்கு பின்னரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்று பெண் உரிமையை பாதுகாத்த நபர் வேறு எவரும் இல்லை.

எனவே சொத்துரிமையிலும், திருமணத்திலும், கணவன் மனைவிக்கிடையிலான தொடர்புகளிலும், தலாக் மற்றும் குலா போன்ற நிலையிலும், தனக்கு சொந்தமாக சொத்துக்களை உருவாக்குகின்ற விவகாரத்திலும், மேலும் தனது சொந்த சொத்துக்களை பயன்படுத்துகின்ற உரிமையிலும், கல்வி பயில்வது தொடர்பான உரிமைகளிலும், பிள்ளைகளை பெறுவது மற்றும் அவர்களது தர்பிய்யத்தின் உரிமைகளிலும், நாட்டின் உரிமைகளில் பங்கு பெறுகின்ற உரிமைகளிலும், தனி நபர் சுதந்திரம் என்ற விவகாரத்திலும், மார்க்க உரிமைகள் மற்றும் கடமைகளிலும், சுருக்கமாக மார்க்க மற்றும் உலகத்தில் எல்லா மைதானத்திலும் பெண்கள் எந்த விவகாரங்களிலெல்லாம் ஈடுபடுவார்களோ அவை அனைத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண் குலத்திற்கான அனைத்து உரிமைகளையும் அங்கீகரித்துள்ளார்கள்.

மேலும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதை தனது உம்மத்திற்கு தூய ஒரு அமானிதமாகவும் அதனை தனது உம்மத்தின் கடமையாகவும் ஆக்கி விட்டுச் சென்றுள்ளார்கள். இதன் காரணமாகவே அரபு பெண்கள் அன்னாரின் வருகையை தங்களுக்கு இரட்சிப்பின் ஒரு தூதுச் செய்தியாக கருதி வந்தார்கள்.

அடுத்து அன்னார் எழுதுகின்றார்கள்: எனது பாதையிலிருந்து விலக நேரிடுகின்றது. அதாவது நான் எடுத்துரைத்து வருகின்ற கட்டுரையிலிருந்து விலகி சில விஷயங்களை கூற நேரிட்டுள்ளது. இந்த நிலை இல்லையென்றால் நான் இன்னும் இது தொடர்பான விளக்கங்களை எடுத்துரைத்திருப்பேன். ஏனென்றால் பெண்ணின் விவகாரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கல்வி சிறப்பு உண்மையிலேயே மிக உயர் தரமான இடத்தில் உள்ளது.

அன்னாருடைய இந்த சொல் முற்றிலும் ஒரு ஆழமான உண்மையை கொண்டதாக உள்ளது. உலகத்தின் விஷயங்களில் எனது இயல்பில் எந்த விஷயங்களின் மீது நேசம் தரப்பட்டுள்ளதென்றால் அதில் ஒன்று, பெண். மற்றொன்று, நறுமணம் ஆகும். ஆனால் எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையாகும். அதாவது இறைவணக்கத்தில் எனது கண்களுக்கு குளிர்ச்சி வைக்கப்பட்டுள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 507–509)

இன்றைய உலகம் பெண்ணின் உரிமைகள் பற்றி பேசுகின்றது. மேலோட்டமான சில விஷயங்களை எடுத்துக் கொண்டு பெண் சுதந்திரத்தைப் பற்றி அவர்கள் பேசுகின்றனர். ஆனால் பெண்களுக்கு சில கட்டுப்பாடுகளை இஸ்லாம் விதித்துள்ளது. ஆனால் அது பெண்களின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காகவும், குடும்பத்தின் அமைதிக்காகவும், எதிர்கால சந்ததிகளின் தர்பிய்யத்திற்காகவும் அந்த கட்டுப்பாடுகளை இஸ்லாம் பெண்களுக்கு விதித்துள்ளது.

இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் இதனையும் ஆட்சேபனையாக எடுத்து வைக்கின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால், பெண்ணிற்கு சுதந்திரம் வழங்குவதும், பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்குரிய உண்மையான போதனைகளை வழங்கியுள்ளதும் இஸ்லாம் மட்டுமே ஆகும். உலகம் இந்த உண்மையை புரிந்து அசுத்தங்களிலிருந்தும், குழப்பங்களிலிருந்தும் தப்பிப்பதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக. நமது பெண்களும் இந்த உண்மையை உணர வேண்டும். சில முறை

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் நண்பர்களாவர். அவர்கள் நல்லவற்றைக் கொண்டு ஏவுகின்றனர். தீயவற்றிலிருந்து தடுக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டுகின்றனர். ஸகாத்து கொடுக்கின்றனர். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். இவர்களுக்கே அல்லாஹ் கருணை காட்டுவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், நுட்பமான ஞானமுள்ளவனுமாவான். **(9:71)**

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 09 July 2020 Issue No. 28

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

சிலர் உலகத்திற்கு பின்னால் செல்கின்றனர். உலகம் கூறுகின்ற பெண் சுதந்திரத்தை அவர்கள் உண்மையாக கருதுகின்றார்கள்.

எனவே அவர்கள் உண்மையை உணர வேண்டும். இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள அந்தஸ்தை அவர்கள் புரிய வேண்டும். ஏனென்றால் அந்த அந்தஸ்தை வேறு எந்த மார்க்கமும் வழங்கவில்லை; வேறு எந்த முற்போக்கு பெயர்தாங்கிய சிந்தனையாளர்களும், மாதர் உரிமை சங்கங்களும் அவர்களுக்கு வழங்கவில்லை. அல்லாஹ் இஸ்லாத்தின் போதனைக்கேற்ப பெண்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்குரிய பாக்கியத்தை ஆண்களுக்கும் வழங்குவானாக. ஏனென்றால் அதன் மூலம்தான் அமைதி நிறைந்த சமூகம் நிலைபெற முடியும்.

இதன் பிறகு நான் சுருக்கமாக தற்போதைய உலக சூழலை துஆவிற்காக கூற விரும்புகின்றேன். நீங்கள் துஆ செய்யுங்கள். இறைவன் இந்த உலகத்தை கொரோனா தொற்று நோயிலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும் சுத்தப்படுத்துவானாக. அதே நேரம் மனிதர்களுக்கும் இந்த புரிதலையும், அறிவையும் வழங்குவானாக.

அதாவது மனித இனம் எஞ்சியிருப்பது என்பது ஏக இறைவனின் பக்கம் குனிவதும், ஒருவர் மற்றவருக்குரிய உரிமையை வழங்குவதிலும்தான் உள்ளது. இதனை உலகம் உணர வேண்டும். மேலும் உலகத்திலிருந்து குழப்பங்களை முடிவுக்குக் கொண்டு வர தியாகங்கள் செய்தவாறு தத்தமது அரசாங்கங்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக. அவர்கள் நீதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்பை வழிநடத்த வேண்டும்.

அமெரிக்காவிலும் இன்றைய நாட்களில் நிம்மதியற்ற தன்மையும், அமைதியின்மையும் பரவி உள்ளது. குறிப்பாக ஒவ்வொரு அஹ்மதியையும் அதன் தீய விளைவுகளிலிருந்து அல்லாஹ் பாதுகாப்பானாக. அங்குள்ள பொது மக்களுக்கும் சரியான வடிவத்தில் தங்களது கோரிக்கைகளை வைப்பதற்கும், உரிமைகளை பெறுவதற்கும் அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

ஆப்ரிக்கன் அமெரிக்கர்கள் அடித்து நொறுக்குவதன் மூலமும், தமது வீடுகளை எரிப்பதன் மூலமும் தமது குரல்களை வெளிப்படுத்துவார்கள் என்றால் அதன் பாதிப்பு அவர்களுக்கே ஏற்படும். ஏனென்றால் இந்த செயலை குறிப்பிட்டு பல ஆப்ரிக்கன் தலைவர்களும் இவ்வாறு கூறியுள்ளனர்.

அதாவது உங்களது வீடுகளை நீங்கள் எரிக்காதீர்கள். உங்களது வீடுகளை அடித்து நொறுக்காதீர்கள். ஆயினும் உங்களது உரிமைகளை பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் ஆகுமான வழிமுறைகளில் உங்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள அனுமதிக்கு உட்பட்டு உங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துங்கள். ஆனால் உங்களது சொத்துக்களை அழிப்பதால் எந்த நன்மையும் இல்லை. அது உங்களுக்கு எதிராக பாதிப்பையே ஏற்படுத்தும்.

எனவே போராட்டக்காரர்களும் இதுபற்றி சிந்திக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் அரசாங்க அமைப்பும் புரிந்து கொள்ள வேண்டும். தனது அதிகாரத்தை பயன்படுத்தி தற்போது ஏற்பட்டுள்ள அனைத்து குழப்பங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியாது. அனைத்து விவகாரங்களுக்கும் தீர்வு அதிகாரம் அல்ல. மாறாக, நீதியுடன் அனைத்து குடிமக்களின் உரிமைகளை வழங்கியவாறு அரசாங்கத்தை நடத்தும்போதுதான் அதற்கு தீர்வு ஏற்பட முடியும். மேலும் நாட்டில் அமைதியும், உறுதித்தன்மையும் நிலைபெற முடியும். அது இல்லாமல் ஒன்றும் நடக்காது. எவ்வளவுதான் ஒரு வலிமை வாய்ந்த அரசாங்கமாக இருந்தாலும் சரியே. பொது மக்கள் நிம்மதியிழந்திருந்தால் எந்த அரசாங்கமும் அதற்கு முன்னால் நிலைபெற முடியாது.

எவ்வாறிருப்பினும் உலகில் எங்கு எங்கெல்லாம் குழப்பங்கள் இருக்கின்றனவோ எல்லா இடங்களிலும் அல்லாஹ் குழப்பத்தை அகற்றுவானாக. அரசாங்கங்கள் குடிமக்களின் உரிமைகளை வழங்குபவர்களாக திகழட்டுமாக. மேலும் பொது மக்களும் தங்களின் உரிமைகளை ஆகுமான அளவில் நின்று கொண்டு அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுப்பவர்களாக இருக்கட்டுமாக.

இதேபோன்று பாகிஸ்தான் அரசாங்கமும் சிந்திக்க வேண்டும். அங்கு வெறும் முல்லாக்களின் அச்சத்தின் காரணமாக அஹ்மதிகளின் மீது இன்றைய நாட்களில் கொடுமையும், கடுமைகளும் அதிகரித்து வருகின்றன. அதனை அவர்கள் செய்யக்கூடாது. மாறாக, நீதியுடன் அரசாங்கத்தை நடத்த வேண்டும். தனது வரலாற்றிலிருந்து பாடம் படிக்க வேண்டும். அஹ்மதிய்யத்தின் விவகாரத்தை எடுத்துக் கொண்டு அநீதியிழைத்து இதற்கு எந்த அரசாங்கத்தாலும் நிலைபெற முடியவில்லை. எந்த அரசாங்கமும் இனியும் நிலைபெற முடியாது.

எனவே இந்த விவகாரத்தை கையில் எடுத்து ஆட்சி அதிகாரத்தை நீடித்துக் கொண்டு செல்லலாம் என்ற எண்ணத்தை கைவிட்டு விட வேண்டும். எனினும் இந்த அநீதிகளின் விளைவாக உலகில் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் முன்பை விட அதிகரித்துள்ளது. அது இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இது இறைவனின் பணியாகும். இதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் எல்லா இடங்களிலும் அநீதிகளையும் குழப்பங்களையும், அமைதியின்மையையும் அகற்ற வேண்டும் என்பதே எமது துஆவாகும். இன்று உலகில் பரவியுள்ள இந்த தொற்று நோயிலிருந்து மனிதன் படிப்பினை பெற்று தனது நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அஹ்மதிகளாகிய நமக்கு முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் உரிமையையும், அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்கும் நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக. ஏனென்றால் அதன் மூலமே நம்மால் இறைவனின் அன்பை அதிகம் அதிகமாக பெற முடியும். மேலும் முன்னேற்றங்களையும் நமது கண்களுக்கு முன்னால் மிக விரைவாக நம்மால் காண முடியும்.

☆ ☆ ☆

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்ஊது)**

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad